Gemeinde Root

வணக்கம் தமிழ் உறவுகளே

நான் சுவிஸ் நாட்டில் 1991ம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வருவதோடு,றோத் (Root) என்னும் கிராமத்தில் 2009ம் ஆண்டிலிருந்து வசித்து வருகின்றேன்.

நான் நன்றாக ஜெர்மன் மொழி பேசுவேன். சுவிஸ் நாட்டிற்கு வந்த புதிதில் எனக்கும் இங்கு உள்ளவர்களுடன் பழகுவதற்று சற்று தயக்கமாக இருந்தது. அத்துடன் எனக்கு தெரியாது யார் எங்கே, என்னத்திற்கு பொறுப்பு என்று, அச்சமயத்தில் எனக்கு எனது மொழியிலும், கலாச்சாரத்திலும் ஒருவர் உதவியும் ஆலோசனையும் புரிந்திருந்தால் எனக்கு இலகுவாக இருந்திருக்கும்;.

இன்று எனக்கு தமிழ் மற்றும் சுவிஸ் கலாச்சாரமும் நன்றாக தெரியும் நான் இரண்டு மொழியும் கதைப்பதுடன் எம் தாய்நாட்டு மக்களுடனும் றோத் மக்களுடனும் தொடர்பை வைத்திருக்கிறேன். அத்துடன் எனக்கு றோத் கிராம அலுவலர்களையும், பாடசாலைகளையும் நன்கு தெரிவதுடன் அதற்கான விடயங்களையும், விபரங்களையும் மற்றும் உதவிகளையும் எங்கு பெறலாம் என்றும் தெரியும்.

2017ல் இருந்து நான் றோத் மக்களுக்கான தொடர்பு இணையத்தில் இருக்கிறேன் நான் தமிழ் பேசும் மக்களுக்கான உதவியை றோத் கிராம மூலமாக செய்கின்றேன்.

உதவிகள்:

-கடிதங்கள் மொழிபெயர்த்தல், பலவிதமான றோத் கிராமத்தால் நடத்தப்படும் வகுப்புகள் (முக்கியமாக ஜெர்மன் மொழி வகுப்புகள்) பற்றி அறிவிப்பதுடன் உங்களை இணைப்பதற்கு வழியமைத்து தருதல்.

-பாடசாலைகளில் மற்றும் றோத் கிராமத்தவர்களின் அறிவிப்புக்கூட்டங்களில் மொழிபெயர்த்தல்.

உங்களுக்கு இக்கடிதம் றோத் கிராம அலுவலகத்தால் அல்லது பாடசாலை அறிவித்தல் கடிதத்துடன் இணைத்து அனுப்பட்டுள்ளது, ஏனெனில் நான் உங்களுக்கு எப்பொழுதும் உதவி புரிய தயாராக உள்ளேன். தயக்கமின்றி என்னுடன் தொடர்பு கொள்ளவும். நான் உங்களுக்கான முடிந்தளவு உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவேன்.

இச் சேவை இலவசம், அத்துடன் உங்களுடன் உரையாடும் அணைத்து விடயங்களும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும். எனது கடமையும் அதுதான்.

இப்படிக்கு அன்புடன்

த. முரளிதரன்

றோத் தமிழ் மக்களுக்கான தொடர்பாளர்

Tel: 0764154775

Email: muralitharsa@gmail.com